The Times of India
Dated: 09.10.2024

# State gets new chief electoral officer

**Chennai:** Archana Patnaik has been appointed as the new chief electoral officer for Tamil Nadu, said an official release from Election Commission of India on Friday. Archana Patnaik succeeds Satyabrata Sahoo, who was recently given additional charge of animal husbandry, dairying, fisheries and fishermen welfare department.

ECI in consultation with state govt has designated Patnaik, a 2002 batch IAS officer, as CEO. ECI communication said Archana Patnaik shall cease to hold and hand over forthwith any charges of work under govt of Tamil Nadu, which she may be holding before assumption of office. Patnaik was MSME secretary, before her appointment as CEO. TNN

The Hindu (English)
Dated: 09.10.2024

# Archana Patnaik is new Chief Electoral Officer of T.N.



Archana Patnaik

**The Hindu Bureau**
CHENNAI

The Election Commission of India (EC) on Friday named IAS officer Archana Patnaik as the Chief Electoral Officer of Tamil Nadu, replacing incumbent Satyabrata Sahoo. Ms. Patnaik is at present the Secretary of the MSME Department.

Ms. Patnaik would cease to hold and hand over forthwith the charge of all or any charges of work under the Government of Tamil Nadu, which she may be holding before such assumption of office as the CEO, an EC notification said. Mr. Sahoo has already been posted as Secretary of the Animal Husbandry, Fisheries and Dairy Development Department.

Deccan chronicle
Dated: 09.10.2024

# EC appoints Archana Patnaik as TN CEO

DC CORRESPONDENT
CHENNAI, NOV. 8

The Election Commission of India appointed MSME Secretary Archana Patnaik as the Chief Electoral Officer for Tamil Nadu in the place of Satyabrata Sahoo.



An IAS officer belonging to the 2002 batch, Archana Patnaik hails from the State of Odisha, to which her predecessor Sahoo, too, belonged. Patnaik had served as the district collector of Coimbatore.

Dt.Next
Dated: 09.10.2024

# Archana Patnaik is new TN Chief Electoral Officer

**CHENNAI: The Election Commission of India (ECI) on Friday appointed Archana Patnaik as the Chief Electoral Officer (CEO) for Tamil Nadu, replacing Satyabrata Sahoo. TN assembly polls are due in May 2026.**

According to a notification issued by the ECI Secretariat, Archana Patnaik has been appointed the CEO of Tamil Nadu in consultation with the State government. She will replace the longest serving CEO of TN, Satyabrata Sahoo, who is holding the additional charge of Secretary, Animal Husbandry.



Archana Patnaik, a 2002 batch IAS officer is now working as Secretary, MSME department, GoTN.

Following the ECI's notification, Archana Patnaik will soon be relieved from the post of MSME secretary.

Dt.Next
Dated: 09.10.2024

# EC nudges poll machine to enhance voter turn-out

MUMBAI: Seeking to counter "urban apathy" among voters in poll-bound Maharashtra, the Election Commission on Friday nudged its poll machinery in the state to enhance voter participation. Addressing a review meeting via video conference from Delhi along with Election Commissioners Gyanesh Kumar and Sukhbir Singh Sandhu, Chief Election Commissioner (CEC) Rajiv Kumar said when voters in Left Wing Extremism (LWE)-affected regions such as Bastar in Chhattisgarh and Gadchiroli in Maharashtra can vote in large numbers in recent polls. The CEC directed officials to be accessible to all stakeholders for any issues.

The Hindu (Tamil)
Dated: 09.10.2024

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக

# அர்ச்சனா பட்நாயக் நியமனம்

● சென்னை

தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் முதல்முறையாக பெண் அதிகாரி, தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டு உள்ளார்.

தமிழக அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை செயலராக இருந்த அர்ச்சனா பட்நாயக், தற்போது தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை இந்திய தலைமை தேர்தல் ஆணையச் செயலர் ராகுல் சர்மா நேற்று இரவு பிறப்பித்தார்.



↑ அர்ச்சனா பட்நாயக்

### முதல்முறையாக பெண் அதிகாரி

ஏற்கெனவே தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக இருந்த சத்ய பிரத சாஹூவுக்கு அண்மையில் கூடுதலாக கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளத் துறைகள் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டன. இனி அவர் இந்த துறைகளின் செயலராகப் பணியாற்றுவார்.

தமிழகத்தில் தலைமை தேர்தல் அதிகாரியாக பெண் ஐஏஎஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

Dinamalar
Dated: 09.10.2024

# தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நியமனம்

சென்னை, நவ. 9--

தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக, அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டு உள்ளார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக சத்ய பிரதா சாஹு, 2018 மார்ச் 15ல் நியமிக்கப்பட்டு பணியில் இருந்து வந்தார்.

இவரது தலைமையில், 2019 லோக்சபா தேர்தல், 2021 சட்டசபை தேர்தல், 2024 லோக்சபா தேர்தல் மற்றும் இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டன.

சமீபத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளத்துறை செயலராக பணியிட மாற்றம் செய்யப்பட்டார். கூடுதலாக, தலைமை தேர்தல் அதிகாரி பொறுப்பையும் கவனித்து வந்தார்.



அர்ச்சனா பட்நாயக்

தற்போது, அவருக்கு பதிலாக அர்ச்சனா பட்நாயக், தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டு உள்ளார். இவர், தமிழகத்தின், 30வது தலைமை தேர்தல் அதிகாரியாகவும், முதல் பெண் அதிகாரியாகவும் பொறுப்பேற்க உள்ளார். இவரது நியமன உத்தரவை, இந்திய தேர்தல் ஆணைய செயலர், ராகுல் சர்மா வெளியிட்டுள்ளார்.

அர்ச்சனா பட்நாயக், கோவை மாவட்ட கலெக்டராக இருந்தபோது, சாலையோர குழந்தைகளுக்கு, கட்டாயக் கல்வி வழங்க நடவடிக்கை எடுத்தார்.

தோட்டக்கலை இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார். தற்போது, குறு,சிறு தொழில்கள் துறை செயலராக பணிபுரிந்து வந்த நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டு உள்ளார்.

Daily Thanthi
Dated: 09.10.2024

# தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நியமனம்

## இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவு

சென்னை, நவ.9-

தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக்கை நியமனம் செய்து இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.



### சத்யபிரத சாகு

தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியாக சத்யபிரத சாகு பணியாற்றி வந்தார். இவர் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் மற்றும் பல்வேறு இடைத்தேர்தல்களை நடத்தியுள்ளார். இந்த நிலையில் சமீபத்தில் தமிழக அரசு அரசாணை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதில், தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு, பால்வளம், கால்நடை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் முதன்மை செயலாளராக கூடுதல் பொறுப்பு வகிப்பார் என்று கூறப்பட்டிருந்தது. எனவே, தமிழகத்தின் அடுத்த தலைமை தேர்தல் அதிகாரியாக யார் பொறுப்பேற்பார் என்ற கேள்வி எழுந்தது.

### அர்ச்சனா பட்நாயக்

இந்த நிலையில், அந்த பொறுப்புக்கு தமிழகத்தின் ஐ.ஏ.எஸ். அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை தமிழக அரசு மற்றும் தலைமை தேர்தல் அதிகாரியாக இருந்த சத்ய பிரத சாகுக்கு இந்திய தேர்தல் கமிஷன் அனுப்பியுள்ளது.

சத்ய பிரத சாகுக்கு அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்தின் ஐ.ஏ.எஸ். அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக 8-ந்தேதி அனுப்பிய கடிதத்தின்படி நியமிக்கப்படுகிறார். எனவே, மாற்றம் செய்யப்பட்டுள்ள தலைமை தேர்தல் அதிகாரி, புதிய தலைமை தேர்தல் அதிகாரியான அர்ச்சனா பட்நாயக்கின் முகவரி, தொலைபேசி எண்கள் ஆகியவற்றை இந்திய தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ஒடிசாவை சேர்ந்தவர்

அர்ச்சனா பட்நாயக் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்தவர். 2002-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக அரசின் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அர்ச்சனா பட்நாயக் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையின் செயலாளராக இதற்கு முன்பு பணியாற்றி வந்தார். இவர் தமிழ்நாட்டின் முதல் பெண் தலைமை தேர்தல் அதிகாரி ஆவார்.